# திரு
# ளுவர் வாசகம்



OFFICE OF ... RAR OF ...
27 AUG 1951
MADRAS

குப்பு 2

வெளியிடுவோர்

M.D. நாகபூஷணம்; சன்

. கார்பரேஷன் பழக்கடை, சென்னை

பரை

விலை 0-5-0

# THIRU
# VALLUVAR VACHAKAM

## CLASS II

**Pandit M. VADIVELAN**

**Edited by**

**Vidvan S. V .Varadaraja Ayyangar, M. O. L.**

**Vivekananda College, Madras - 4.**

*Revised Edition 1950*

M. D. NAGABHUSHANAM & SON,

108, Corporation Fruit Market,

MADRAS-1 : : MATHURAI

*Rights Reserved]* *1951* **[Price As. 5.**

*Reprint*—1951

Approved by the Text-Book Committee Madras,
for Class use, Vide Fort St. George Gazette, Supplement
to part I-B. part I Page 30, dated 22-5-51.

**Rathnam Press, Madras-1.**

OFFICE OF THE REGISTRAR
27 AUG 1951
MADRAS

## முகவுரை

திருவள்ளுவர் - வாசகம் இரண்டாம் புத்தகம் புதிய ஆரம்பப் பள்ளிக்கூடப் பாடத் திட்டத்தின்படி எழுதப்பட்டிருக்கிறது.

வாய் மூலமாகப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டிய விஷயங்களை ஆசிரியர் பாடத் திட்டத்தில் கண்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

இதில் நானூறு புதுச்சொற்கள் விரவி வந்திருக்கின்றன.

நீதி வாக்கியங்கள், சொல்லடுக்கு வாக்கியங்கள், பழமொழிகள், தோத்திரப் பாடல்கள், ஒலிச் சொற்கள் என்பவற்றைப் பாகம் பாகமாகப் பிரித்துப் பல முறையாகக் கற்பித்துப் பிள்ளைகளை மனப்பாடம் செய்விக்கவேண்டும்.

ஆசிரியர்கள் பாடதிட்டத்தை நன்கு உணர்ந்து பயன் படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

இப்புத்தகம் பல பாடசாலைகளில் பாட புத்தகமாக வைக்கப்பட்டுப் பயன் படும் என்று நம்புகிறேன்.

ஆக்கியோன்.

# பொருளடக்கம்


| எண். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 1. | என் தாயார் | 1 |
| 2. | என் தந்தையார் | 3 |
| 3. | திருவள்ளுவர் | 5 |
| 4. | தாய்மொழி | 6 |
| 5. | கொடிப்பாட்டு | 7 |
| 6. | செயலும் ஒலியும் | 9 |
| 7. | இரட்டைச் சொற்கள் | 8 |
| 8. | அடுக்குத் தொடர் | 9 |
| 9. | மயிலும் குயிலும் | 10 |
| 10. | பாப்பாப் பாட்டு | 12 |
| 11. | யானையும் எறும்பும் | 13 |
| 12. | காலம் | 16 |
| 13. | செய்கைப்படம் I | 18 |
| 14. | செய்கைப்படம் II | 19 |
| 15. | செய்கைப்படம் III | 20 |
| 16. | ஜப்பானியர் | 21 |
| 17. | உடற் பயிற்சி | 24 |
| 18. | ஆத்திசூடி | 28 |
| 19. | நாய் | 29 |
| 20. | பாம்பாட்டிப் பாட்டு | 35 |
| 21. | நல்ல சிறுவன் | 37 |
| 22. | பெரிய மனிதர் | 38 |
| 23. | எதனால் செய்யப்பட்டது? | 39 |
| 24. | வேலன் கதை | 40 |
| 25. | உலகநீதி | 44 |
| 26. | தவளையும் எலியும் | 45 |
| 27. | சேவலும் சிற்றெறும்பும் | 47 |
| 28. | எதிர்பதங்கள் | 50 |
| 29. | இரயில்வே ஸ்டேஷன் | 51 |
| 30. | கும்மிப்பாட்டு | 53 |
| 31. | பழமொழிகள் | 54 |
| 32. | விறகுவெட்டியும் தேவதையும் | 55 |
| 33. | முருகன் கதை | 57 |
| 34. | தபால் கடிதம் | 60 |
| 35. | எங்கள் நாடு | 63 |

திரு

# வள்ளுவர் வாசகம்

## இரண்டாம் புத்தகம்



### 1. என் தாயார்

| | | |
|---|---|---|
| தின்பண்டம் | காலை | அன்னை |
| மருந்து | மாலை | தெய்வம் |
| பசிவேளை | கதைகள் | வணங்கு |

1. இவர் என் தாயார்.
2. இவர் என்னை அன்புடன் வளர்க்கிறார்.
3. பசி வேளையில் சோறு ஊட்டுகிறார்.
4. நோய் வந்தால் மருந்து கொடுக்கிறார்.

5. பகலில் என்னைப் பள்ளிக்கூடம் அனுப்புகிறார்.
6. இரவில் எனக்குக் கதைகள் சொல்லுகிறார்.
7. காலையில் என்னைக் குளிப்பாட்டுகிறார்.
8. மாலையில் எனக்குத் தின்பண்டம் தருகிறார்.
9. தாயாரை அன்னை என்றும் சொல்லலாம்.
10. அன்னையே தெய்வம்; அவரை வணங்குவோம்.

### I. பயிற்சி:

1. தாயாரின் வேறு பெயர்கள் எவை?
2. தாய் உன்னை எப்படி வளர்க்கிறார்?
3. தாயார் உனக்கு எப்பொழுது கதை சொல்லுவார்?
4. நீ குளிப்பது தண்ணீரிலா? வெந்நீரிலா?
5. தாயார் உனக்கு எப்பொழுது தின்பண்டம் கொடுப்பார்?

### II. கோடிட்ட இடங்களை நிரப்பு:—

1. தாயை ——— என்றும் சொல்லலாம்.
2. நோய் வந்தால் தாய் ——— கொடுப்பார்.
3. தாயார் இரவில் ——— சொல்வார்.
4. பகலில் என்னைப் ——— அனுப்புவார்.



## 2. என் தந்தையார்

| | | |
|---|---|---|
| புத்திமதி | பாடம் | பிதா |
| விடுமுறை | ஆடை | தகப்பனர் |
| அன்பு | பூசை | தெய்வம் |

1. இவர் என் தந்தையார்.
2. இவரும் என்னிடம் அன்பு உள்ளவர்.
3. எனக்கு அவர் புத்திமதி சொல்லுவார்.
4. தினமும் எனக்குப் பாடம் சொல்லித் தருவார்.
5. இவர் தினமும் காலையில் பூசை செய்வார்.
6. விடுமுறை நாளில் அவருடன் நான் வெளியே போவேன்.
7. இவர் எனக்கு ஆடைகள் வாங்கித் தருவார்.
8. தந்தையைத் தகப்பனர் என்றும் சொல்லலாம்.
9. பிதா என்றும் அவரை அழைக்கலாம்.
10. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

### பயிற்சி :

1. தந்தையைக் குறிக்கும் வேறு சொற்கள் எவை?
2. தந்தையார் பூசை செய்யும்போது நீ என்ன செய்வாய்?
3. தந்தை உனக்கு என்னென்ன செய்கிறார்?
4. நீ எப்போது வெளியே போவாய்?
5. உன் தந்தையார் பெயர் என்ன?

### விடை கூறு :

1. உன் பெயர் என்ன?
2. உன் தகப்பனார் பெயர் என்ன?
3. உன் ஊர் பெயர் எது?
4. உனக்கு என்ன வயது?
5. நீ படிக்கும் பள்ளிக்கூடத்தின் பெயர் என்ன?
6. நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?

### கோடிட்ட இடங்களை நிரப்பு :

1. தந்தை என்னிடம் ——— உள்ளவர்.
2. தகப்பனார் எனக்கு ——— கூறுவார்.
3. அன்னையும் ——— முன்னறி ———.

————



# 3. திருவள்ளுவர்

| | | |
|---|---|---|
| புலவர் | நெசவு | பொறுமை |
| பகவன் | தொழில் | வள்ளுவர் |

1. இவர் திருவள்ளுவர்.
2. திருவள்ளுவர் ஒரு தெய்வப் புலவர்.
3. இவர் மயிலாப்பூரில் பிறந்தவர்.
4. இவர் தந்தை பெயர் பகவன் என்பது.
5. இவர் தாயார் பெயர் ஆதி என்பது.
6. வாசுகியார் என்பவரை இவர் மணந்தார்.
7. இவர் நெசவுத் தொழில் செய்தார்.
8. இவர் மிகவும் பொறுமை உள்ளவர்.
9. தமிழ் மொழியை இவர் நன்கு கற்றார்.
10. 'திருக்குறள்' என்பது இவர் எழுதிய நூல்.

கேள்விகள் :

1. வள்ளுவர் தாய் தந்தை பெயர் என்ன ?
2. வள்ளுவர் செய்த தொழில் யாது ?
3. அவர் இயற்றிய நூல் எது ?
4. உனக்குத் தெரிந்த ஒரு புலவர் பெயர் சொல்லு.
5. உனது தாய் மொழி எது ?



# 4. தாய் மொழி

தமிழ் தாய்மொழி தமிழர் மனிதர்

1. படத்தில் நான்கு பேர் இருக்கிறார்கள்.
2. முதலில் இருப்பவர் இங்கிலீஷ்காரர்.
3. இரண்டாம் மனிதர் முகம்மதியர்.
4. மூன்றாம் மனிதர் சைனாக்காரர்.
5. நான்காம் மனிதர் தமிழர்.
6. மனிதர் பேச உதவுவது மொழி.
7. இங்கிலீஷ்காரர் பேசுவது இங்கிலீஷ் மொழி.
8. முகம்மதியர் பேசுவது உருது மொழி.
9. சைனாக்காரர் பேசுவது சீனமொழி.
10. தமிழர் பேசுவது தமிழ் மொழி.
11. தமிழ் மொழி நமது தாய் மொழி.
12. தமிழ் மொழியை யாவரும் போற்றுவர்.



# 5. கொடிப்பாட்டு

1. எங்கள் கொடி பெரிய கொடி,
என்றும் உயர்ந்து பறக்கும் கொடி.

2. நாம் எல்லோரும் விரும்பும் கொடி,
நாளும் எண்ணிப் புகழும் கொடி.

3. பள்ளிக்கூடச் சிறுவர் கொடி,
துள்ளி நிமிர்ந்து பிடிக்கும் கொடி.

4. உள்ளம் தன்னில் உவக்கும் கொடி,
இன்பம் என்றும் அளிக்கும் கொடி.

குறிப்பு :—இந்த இசையடிகளை ஏற்ற செய்கைகளுடன் வகுப்புப் பிள்ளைகள் பலர் கூடிக் கொடிகளைப் பிடித்துப் பாடுமாறு செய்தல் வேண்டும்.

## 6. செயலும் ஒலியும்

| | | |
|---|---|---|
| பெரியவர் | மரக்கிளை | மழை |
| காற்று | முறிந்து | மின்னல் |

1. பெரியவர் முன் கல் கல் என்று சிரிக்காதே.
2. புதிய இடத்தில் திடீர் என்று நுழையாதே.
3. காற்றால் மரக்கிளை மளார் என்று முறிந்தது.
4. அடை மழை சோ வென்று பெய்கிறது.
5. பசி மிகுந்தால் காது கும் என்று அடைக்கும்.
6. குழந்தையைப் பளார் என்று அடிக்காதே.
7. காலில் முள் சுருக் என்று தைத்தது.
8. தந்தை திடும் என்று ஊருக்குப் போனார்.
9. சபையில் புலவர் கணீர் என்று பேசினார்.
10. கால் தவறித் தொப் என்று விழுந்தான்.
11. தீ குபீர் என்று பிடித்துக் கொண்டது.
12. மின்னல் பளிச் என்று மின்னியது.

குறிப்பு :—தடித்த எழுத்துச் சொல் ஒவ்வொன்றையும் அமைத்துப் பிள்ளைகளை ஒவ்வொரு சொந்த வாக்கியம் சொல்லவும் எழுதவும் செய்யவேண்டும்.

கோடிட்ட இடங்களை நிரப்பு :—

1. மழை ——— என்று பெய்தது.
2. முருகன் ——— என்று பதில் சொன்னான்.
3. நெருப்பு ——— என்று எரிந்தது.
4. சிறுவன் மணலில் ——— என்று குதித்தான்

## 7. இரட்டைச் சொற்கள்

| | |
|---|---|
| தூற்றல் | உலை |
| திகழும் | இராட்டினம் |

1. ஒரு போதும் சளசள என்று பேசாதே.
2. படபட என்று தூற்றுதல் கூடாது.
3. பொன் நகை பளபள என்று திகழும்.
4. உலை தளதள என்று கொதிக்கும்.
5. இராட்டினம் கிறுகிறு என்று சுழல்கிறது.
6. புலியைக் கண்டால் கிடுகிடு என்று நடுங்குவாய்.
6. தீ தகதக என்று எரிகிறது.

பயிற்சி:

மேலே உள்ளபடி ஐந்து வேறு வாக்கியங்கள் எழுதுக :—

## 8. அடுக்குத் தொடர்.

| | | | |
|---|---|---|---|
| விரைந்து | மகிழ்வு | துன்பம் | இசைவு |
| அச்சம் | வெகுளி | வெறுப்பு | |

1. போ போ விரைந்து போ (விரைவு)
2. பாம்பு பாம்பு நல்ல பாம்பு (அச்சம்)
3. வருக வருக இனிதே வருக (மகிழ்வு)
4. குற்றம் குற்றம் பெருங்குற்றம் (வெகுளி)
5. அப்பா அப்பா நோகிறதே (துன்பம்)
6. சீ சீ ஓடிப்போ (வெறுப்பு)
7. ஆம் ஆம் அது மெய்யே (இசைவு)

பயிற்சி

இப்படிப்பட்ட சில வாக்கியங்கள் வரைக.



# 9. மயிலும் குயிலும்

| | | |
|---|---|---|
| பயன் | பகர்வாய் | பழி |
| தோகை | ஞாயிறு | சோலை |
| கோலம் | அகம் | மகிழ |
| மதி | எழில் | வான் |

(மயில்)

குயிலே உனக்குக் குரல் இருந்தும்!
பயன்தான் என்ன பகர்வாயே!

(குயில்)

பயனே கேட்கும் பழி மிகுந்த
மயிலே என்ன மதி உனக்கே!

(மயில்)

என்னைப் போன்ற எழில் உண்டோ?
உன்னிப் பார்த்து உரைப்பாயே!

(குயில்)

இனிக்கும் ஓசை உனக்குண்டோ?
உனக்கோ மயிலே ஒன்றுண்டோ?

(மயில்)

வானில் மேகம் வரக் கண்டால்
நானென் தோகை நலிவேனே?

(குயில்)

மாலை ஞாயிறு மறையுங்கால்
சோலைப் பாட்டுச் சொல்லேனோ?

(மயில்)

வேலன் விரும்பும் என் பெருமை
கோலக் குயிலே குறியாயோ?

(குயில்)

அன்று வள்ளி அகமகிழ
நின்று கூவி நிலைத்தேனே?

குறிப்பு:— ஒரு பிள்ளையை மயிலாகவும் மற்றொரு பிள்ளையைக் குயிலாகவும் நிறுத்தி, இந்த வாக்கு வாதத்தைக் கற்பிக்க கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லுக.

**தெரிந்து கோள்:—**

பகர்வாய் - சொல்வாய், மதி - புத்தி, எழில் - அழகு. **உன்னிப்பார்த்து** - நன்றாக நினைத்துப் பார்த்து, வானில் - ஆகாயத்தில், நலிவேன் - அவிழ விடுவேன், ஞாயிறு – சூரியன், கோலக் குயில் - அழகான குயில், அகம் – மனம், மகிழ - சந்தோஷப்பட **பழி** – கெடுதி, பயன் - உண்டாவது, உரைப்பாய் - சொல்லுவாய், குறி – நினை.

கேள்விகள்:

1. மேகத்தைக் கண்டால் மயில் என்ன செய்யும்?
2. மாலையில் குயில் என்ன செய்யும்?
3. மயிலுக்கு எதனால் பெருமை? குயிலுக்கு எதனால் பெருமை?

# 10. பாப்பாப் பாட்டு

| | | |
|---|---|---|
| ஓய்ந்து | தோழன் | வழக்கம் |
| பொழிந்து | கனிவு | பிழைக்கும் |
| குழைந்து | ஆதரி | ஆகாது |

1. ஓடி விளையாடு பாப்பா!—நீ
 ஓய்ந்திருத்தல் ஆகாது பாப்பா!
 கூடி விளையாடு பாப்பா!—ஒரு
 குழந்தையை வையாதே பாப்பா!

2. பாலைப் பொழிந்து தரும் பாப்பா!—அந்தப்
 பசுமிக நல்லதடி பாப்பா!
 வாலைக் குழைத்துவரும் நாய்தான்! அது
 மனிதருக்கு தோழனடி பாப்பா!

3. வண்டி இழுக்கும் நல்ல குதிரை!—நெல்லு
 வயலில் உழுதுவரும் மாடு,
 அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
 ஆதரிக்க வேணுமடி பாப்பா!

4. காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
 கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
 மாலை முழுவதும் விளையாட்டு—என்று
 வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

பயிற்சி

விடை கூறு :—

1. பாப்பா செய்யக்கூடாதவை எவை?
2. எவற்றை நாம் ஆதரிக்க வேண்டும்?
3. பாப்பா என்னென்ன செய்ய வழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்?
4. பசு நல்லது என்றதேன்?



## 11. யானையும் எறும்பும்

ஒரு வனத்தில் யானை ஒன்று வாழ்ந்து வந்தது. அது நாள்தோறும் மூங்கிலை உடைத்துத் தின்வது வழக்கம். ஒருநாள் அது வழக்கம்போல் தீனிதேடப் புறப்பட்டுச் சென்றது. செல்லும் வழியில் ஒரு பெரிய பளபளப்பான மூங்கில் செடியை அது கண்டது. கண்டதும் ஒரு மூங்கிலை உடைக்க அது தன் துதிக்கையை நீட்டியது. அச்சமயம் அந்த மூங்கிலில் இருந்த ஒரு பெரிய எறும்பை அது பார்த்தது. பார்த்ததும் அந்த எறும்புடன் பேச யானைக்கு விருப்பம் உண்டாயிற்று. பிள்ளைகளே, அந்த யானையும் எறும்பும் பேசியதைக் கீழே படியுங்கள்.

(யானை)

சின்னஞ் சிறிய எறும்பாரே !
தன்னந் தனியே ஏனிங்கே ?

(எறும்பு)

பென்னம் பெரிய பெரியப்பா !
தின்னத் தான் நான் வந்தேன்.

(யானை)

மூங்கில் தானும் கரும்பாமோ ?
ஏங்கித் தான் நீ நிற்பாயே.

(எறும்பு)

எண்ணிப் பார்த்துச் சொல்லண்ணு !
மண்ணில் தானும் உண்பேனே.

(யானை)

என்றன் எறும்பே எப்படியோ
உன்றன் உணவைச் சொல்வாயே.

(எறும்பு)

எங்கும் எனக்கு ஒருமூக்கு
அங்குரம் வைப்பான் ஆண்டவனே.

(யானை)

அங்குரம் வைப்பான் ஆண்டவன் தான்
மூங்கிலில் அங்குரம் ஏதையா ?

(எறும்பு)

உண்ணுவ தெல்லாம் அங்குரமோ ?
பண்டம் பலவும் தின்பேனே.

(யானை)

இப்படி யோ நீ பேசுகிறாய் !
இப்போ துன்னை அழிப்பேனே !

(எறும்பு)

வடிவில் சிறியன் என்றே நீ
மடமை யாக எண்ணாதே.

(யானை)

சின்னஞ் சிறியாய் என்செய்வாய் ?
உன்னை இன்னே தேய்த்திடுவேன்.

(எறும்பு)

கையைத் தூக்கும் முன்னே நான்
ஐயோ காதில் புகுவேனே.

இவ்வாறு பேசிவிட்டு எறும்பு விர் என்று ஓடி மறைந்துவிட்டது. யானையும் கோபமாய்ச் சென்று விட்டது.

பயிற்சி

1. யானை எங்கே எறும்பைக் கண்டது ?
2. எறும்பு யானைக்கு என்ன சொல்லிற்று ?
3. யானை தேய்ப்பேன் என்றதற்கு எறும்பு என்ன சொன்னது ?
4. இந்தக் கதையால் நீ என்ன தெரிந்து கொண்டாய் ?

## 12. காலம்

| | | |
|---|---|---|
| மணி | நிமிஷம் | விநாடி |
| மாலை | மாதம் | வாரம் |
| ஆண்டு | கிழமை | காலை |

காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரையில் பகல்.

மாலை ஆறு மணியிலிருந்து அடுத்த காலை ஆறு மணி வரையில் இரவு.

ஒரு பகலும் ஓர் இரவும் சேர்ந்தது ஒருநாள்.
பகல் பொழுது பன்னிரண்டு மணி நேரம்.
இரவுப்பொழுது பன்னிரண்டு மணி நேரம்.
இருபத்து நான்கு மணி நேரம் கொண்டது ஒரு நாள்.
ஒரு மணிக்கு அறுபது நிமிஷம்.
ஒரு நிமிஷத்துக்கு அறுபது விநாடி.
நாள் என்றாலும் கிழமை என்றாலும் ஒன்றே.

**கிழமைகள் ஏழு :**

அவை ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க் கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக் கிழமை, சனிக்கிழமை ஆகும்.

ஏழு நாட்கள் கொண்டது ஒருவாரம்.
பதினைந்து நாட்கள் கொண்டது ஒரு பக்ஷம்.

இரண்டு பக்ஷங்கள் அல்லது முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம்.

பன்னிரண்டு மாதங்கள் சேர்ந்தது ஓர் ஆண்டு அல்லது ஒரு வருஷம்.

பன்னிரண்டு மாதங்கள் :—சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பவை.

வருஷங்கள் அறுபது.

அவற்றின் பெயர்களை நீங்கள் பெரிய வகுப்புக்களில் தெரிந்துகொள்ளுவீர்கள்.

### கேள்விகள்

1. ஒரு வருஷத்திற்கு எத்தனை மாதங்கள் ?
2. பக்ஷம் என்பது என்ன ?
3. கார்த்திகை எத்தனையாம் மாதம் ?
4. எத்தனை மணி நேரம் கொண்டது ஒரு நாள் ?
5. ஒரு நிமிஷத்துக்கு எத்தனை விநாடி ?
6. கிழமைகளின் பெயர்கள் எவை ?

கோடிட்ட இடங்களை நிரப்பு :—

1. ஒரு ——— ஓர் —— சேர்ந்தது ஒரு நாள்.
2. ஒரு வாரத்தில் ——— இருக்கின்றன.
3. வருஷத்துக்கு —— மாதங்கள்.
4. பகல் ——— மணி நேரம்.
5. காலை ——— மாலை ஆறு மணி வரையில் பகல்.
6. ஒரு —— அறுபது நிமிஷம்.

# 13. செய்கைப்படம் [1]



குறிப்பு :—ஒவ்வொரு படத்தைப்பற்றியும் ஒவ்வொரு வாக்கியம் எழுதச் செய்க.

# 14. செய்கைப்படம் [2]



குறிப்பு :— ஒவ்வொரு - படத்தைப்பற்றியும் இரண்டு இரண்டு வாக்கியங்கள் எழுதச்செய்க.

# 15. செய்கைப்படம் [3]



குறிப்பு :—ஒவ்வொரு படத்தைப்பற்றியும் மூன்று மூன்று வாக்கியங்களைப் பிள்ளைகள் எழுதவேண்டும்.



## 16. ஜப்பானியர்

| | | |
|---|---|---|
| கிழக்கு | அட்டை | நற்குணம் |
| தட்டை | எசமானி | விருந்தாளி |
| கோப்பை | ஆவல் | தேர்ச்சி |

நாம் வாழும் தேசம் இந்தியா. இதற்குக் கிழக்கே ஜப்பான் தேசம் என்று ஒரு தேசம் இருக்கிறது. அந்த நாட்டில் வாழ்பவர் ஜப்பானியர் ஆவார்.

ஜப்பானியர் குள்ள உருவம் உடையவர்கள். அவர்கள் மஞ்சள் நிறமாய் இருப்பார்கள். அவர்கள் மூக்கு தட்டையாக இருக்கும். அவர்கள் கறுத்த மயிர் உடையவர்கள்.

ஜப்பானியர் நம்மைப்போல கல்லால் வீடு கட்டுவ தில்லை. அவர்கள் வீடு மரத்தாலும் அட்டையாலும் கட்டப்படும்; உள்ளே நாற்காலி முதலான ஆசனங்கள் இரா; கீழே பாய் விரித்திருக்கும். அந்த விரிப்பின் மேலேதான் யாவரும் உட்கார வேண்டும். ஆயினும், அவர்கள் தங்கள் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வார்கள்.

ஜப்பானியரிடம் பல நற்குணங்கள் உண்டு. அவர்கள் விருந்தினரை மிகவும் உபசரிப்பார்கள். விருந்தாளி வந்தவுடன், வீட்டு எசமானி அவரை மண்டியிட்டு வணங்குவாள்; பின்பு, அவரை வீட்டின் உள்ளே அழைத்துச் செல்லுவாள்.

விருந்தாளி உள்ளே சென்று அமர்ந்ததும் வீட்டு எசமானனும் எசமானியும் அவரை வணங்குவார்கள். பிறகு எல்லோரும் கீழே வட்டமாக உட்கார்ந்து உண்பார்கள். உணவு, நடுவில் ஒரு கோப்பையில் வைக்கப்படும். அக்கோப்பையிலிருந்து எடுத்து அருந்துவார்கள்.

ஜப்பானியச் சிறுவரும் சிறுமியரும் படிப்பதில் ஆவல் கொள்வார்கள்; தினமும் தவறுமல் பள்ளிக்கூடம் போவார்கள்; பாடங்களைக் கருத்துடன் வாசிப்பார்கள். மேலும் அவர்கள் வர்ணக் காகிதங்களால் அழகிய பூவேலை செய்வதிலும் தேர்ச்சி உடையவர்கள்.

ஜப்பான் தேசத்துச் சிறுவர்கள் காற்றுடி விடுவதில் கைதேர்ந்தவர்கள். அதில் அவர்களுக்கு விருப்பம் அதிகம். பெரியவர்களும் இதில் கலந்து கொள்வது

உண்டு. வருஷத்தில் ஒரு முறை ஜப்பானில் காற்றாடித் திருவிழா நடக்கும்.

ஜப்பானியச் சிறுமிகள் வருஷத்திற்கு ஒரு முறை திருவிழாக் கொண்டாடுவார்கள். அன்று அவர்கள் தங்கள் வீட்டிலுள்ள பொம்மைகளை எல்லாம் அலங்காரமாக வைத்து மகிழ்வார்கள். இதற்குப் பொம்மைத் திருவிழா என்று பெயர். அன்று மாலையில் சிறுமியர் விருந்துண்டு, வேடிக்கையாகப் பொழுது போக்குவார்கள்.

ஜப்பானியர் மிகவும் புத்திசாலிகள். அவர்கள் கஷ்டப்பட்டு உழைப்பார்கள். கண் பார்த்ததைக் கை செய்யும் சாமர்த்தியம் அவர்களுக்கு உண்டு. ஜப்பானியர் செய்யும் பல பொருள்கள் இந்தியாவில் விற்கப்படுகின்றன.

### கேள்விகள்

1. ஜப்பான் தேசம் எங்கே இருக்கிறது?
2. ஜப்பானியர் எப்படிக் காணப்படுவார்கள்?
3. ஜப்பானியர் எவற்றால் வீடு கட்டுகிறார்கள்?
4. ஜப்பானியர் விருந்தினரை எப்படி உபசரிப்பார்கள்?
5. ஜப்பானியச் சிறுவர் சிறுமியரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

### பயிற்சி

| ஆண்பால் | பெண்பால் |
|---|---|
| சிறுவன் | சிறுமி |

இதுபோல் பின்வரும் ஆண்பால் பெயர்களுக்குப் பெண்பால் கூறு:—

எசமான், வேலைக்காரன், வண்ணான்.

## 17. உடற்பயிற்சி

| | | |
|---|---|---|
| உடற்பயிற்சி | உபாத்தியாயர் | உறுப்புக்கள் |
| மடித்து | வளைத்து | நிமிர்த்தி |
| ஆசிரியர் | மாணவர்கள் | கடமை |
| செய்கை | சுகம் | உயர்த்து |
| ஸ்தானம் | எளிதாக | பின் வாங்கி |
| செல்வம் | சம்பாதிக்கலாம் | பாடசாலை |
| தொழில் | சாதாரணமாக | கூறினால் |

பிள்ளைகளே, இந்தப் படத்தில் இருப்பவர் உடற்பயிற்சி உபாத்தியாயர். உடம்பில் உள்ள கை, கால், கழுத்து முதலிய உறுப்புக்களை மடித்து, வளைத்து, நிமிர்த்திப் பழகுவதற்கு உடற்பயிற்சி என்று பெயர்.



ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வோர் உடற்பயிற்சி ஆசிரியர் உண்டு. பாடசாலையிலிருக்கும் எல்லா மாணவர்களுக்கும் உடற்பயிற்சி, கற்றுக்கொடுப்பதுதான் அந்த ஆசிரியர் கடமை.

சாதாரணமாகப் பாடசாலை மாணவர்கள் உடற்பயிற்சி செய்ய விரும்புவதில்லை. உடம்பு சரியாக இல்லை என்று கூறி அந்த உபாத்தியாயரை அவர்கள் ஏமாற்றுகிறார்கள். இது மிக மிகத் தவறான செய்கை. தினமும்

உடற்பயிற்சி செய்வதால் உடம்புக்குப் பலமும் சுகமும் ஏற்படும்.

இந்தப் படத்தைப் பாருங்கள். நான்கு மாணவர்களுக்கு அந்த உபாத்தியாயர் உடற்பயிற்சி கற்றுக்



கொடுக்கிறார். ஒன்று என்று சொன்னால் நிற்கும் இடத்தில் சரியாக நின்று கைகளைப் பக்கங்களில் தோள்களுக்குச் சரியாக உயர்த்த வேண்டும். இரண்டு என்று சொன்னால் ஒரு காலை எடுத்து முன்னே மடிய வைத்துத் தூக்கிய கைகளோடு நிற்கவேண்டும். மூன்று என்று கூறினால், உயர்த்தின கைகளோடு எடுத்து வைத்த காலை பழைய ஸ்தானத்தில் தூக்கி வைத்துக் கொள்ள வேண்டும். நான்கு என்று சொன்னால், உயர்த்தின கைகளை எப்போதும் போலப் பக்கங்களில் தொங்கவிட்டுக் கொள்ளவேண்டும்.



இதுவரையில் ஒரு பயிற்சி. இது எவ்வளவு எளிதாக இருக்கிறது பார்த்தீர்களா ? இதைச் செய்வதற்குப் பின்வாங்கி, உடம்பு சரியாக இல்லை என்று பொய் சொல்லலாமா ? இதைப்போல இன்னும் எத்தனையோ பயிற்சிகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் நன்ருகப் பழகினுல், உடம்பு வலிவுபெறும். உடல் வலிவுடன் இருந்தால் நோய் வாராமல் சுகமாக வாழலாம். நோயில்லாமல் இருந்தால், நன்ருகப் படிக்கலாம், நன்ருகப் படித்தால், நல்ல தொழில் செய்து செல்வம் தேடலாம்.

## சொற்பொருள்

பாடசாலை - பள்ளிக்கூடம். ஆசிரியர் - உபாத்தியாயர், மாணவர்கள் - பள்ளிக்கூடப் பிள்ளைகள், கடமை - வேலை, ஸ்தானம் - இடம், எளிதாக - இலேசாக, பின்வாங்கி-பயந்து, செல்வம் - பொருள்.

## கேள்விகள்

1. எவையேனும் மூன்று உறுப்புகளின் பெயர்களைச் சொல்லு.
2. உடற்பயிற்சி என்பது என்ன ?
3. உடற்பயிற்சி ஆசிரியரின் கடமை என்ன ?
4. உடற்பயிற்சி செய்வதால் என்ன நன்மை ?
5. உடலுக்கு இன்னொரு பெயர் என்ன ?
6. உபாத்தியாயருக்கு மற்ருெரு பெயர் என்ன ?
7. சொன்ஞன் என்பதற்கு வேறு சொல் கூறு.

## பயிற்சி

எழுதியுள்ளபடி செய்:—

1. எழுந்திரு.
2. தலையைக் குனி.
3. கழுத்தை நிமிர்த்து.
4. கையைப் பக்கங்களில் தூக்கு.
5. கையை இறக்கு.
6. ஒரு காலை முன் எடுத்து வை.
7. எடுத்து வைத்த காலைப் பழைய ஸ்தானத்துக்குக் கொண்டு போ.
8. புத்தகத்தை மேஜைமேல் வை.
9. கதவுக்குத் தாழ்ப்பாள் போடு.
10. கதவை மூடு.
11. கதவைத் திற.
12. இரண்டு கால்களையும் கொஞ்சம் விரித்து வை.
13. இரண்டு தோப்புக்கரணம் போடு.
14. நாற்காலிமேல் ஏறி நில்.
15. மெதுவாக இறங்கி விடு.
16. மேஜையின் கீழ் பதுங்கு.
17. மேஜையின் மேல் ஏறி உட்காரு.
18. புத்தகத்தை எடு.
19. இபருதாம் பக்கம் எடு.
20. அதில் உள்ள பாடத்தைப் படி.

## 18. ஆத்தி சூடி

| | | |
|---|---|---|
| அறம் | ஆறுவது | சினம் |
| கரவேல் | ஈவது | விலக்கேல் |
| எண் | எழுத்து | இகழேல் |
| ஐயம் | இட்டு | ஒப்புரவு |
| ஒழியேல் | ஔவியம் | அஃகம் |
| ஒழுகு | ஓதுவது | இகழ்ச்சி |
| ஏற்பது | விளம்பேல் | இயல்வது |

அறஞ்செய விரும்பு.
ஆறுவது சினம்.
இயல்வது கரவேல்.
ஈவது விலக்கேல்.
உடையது விளம்பேல்.
ஊக்கமது கைவிடேல்.
எண்ணெழுத்து இகழேல்.
ஏற்பது இகழ்ச்சி.
ஐயம் இட்டுஉண்.
ஒப்புர வொழுகு.
ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்.
அஃகம் சுருக்கேல்.

குறிப்பு:— ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு இவ்வாக்கியங்களின் பொருள்களைச் சொற்பிரித்துக் கூறுவதோடு, வாக்கியங்களை மனப் பாடம் செய்யும்படியும் அவர்களைப் பழக்க வேண்டும்.



# 19. நாய்

| | | |
|---|---|---|
| பறவை | மொழிவது | விலங்கு |
| பழகுவது | பிராணி | அடங்கி |
| வளர்ப்பவர் | குரைக்கும் | நன்றி |
| நிமிர்ந்து | மடிந்து | பார்வை |
| வளைந்து | மோப்பம் | வட்டம் |
| வேட்டைக்காரர் | வளைவு | செவிகள் |
| விழுந்துவிட்டது | இயற்கை | மிகுதி |
| சித்திரம் | நாய் | நிமிர்ந்த |
| ஆச்சரியம் | தைரியம் | குச்சு |
| பின்புறம் | சிதற | பதுங்கு |
| தூரம் | முன்புறம் | சட்டை |

மயில், குயில், காகம், புரு, கோழி, மைனு, கிளி, வாத்து, பருந்து, கொக்கு, குருவி முதலியவை பறவை கள் ஆகும். நாய், பூனே, ஆடு, மாடு, குதிரை, கழுதை, யானே, புலி, சிங்கம், கரடி, ஒட்டகம், குரங்கு, நரி முத லியன விலங்குகள் ஆகும். விலங்குகளுக்கு மிரு கங்கள் என்றும் பெயர் உண்டு. விலங்குகள் இரண்டு வகைப்படும். ஒருவகைப் பிராணிகள் நம்மால் பழக்கப் பட்டு நமக்கு அடங்கி வேலே செய்யும். மற்ருெரு வகை நமக்கு அடங்காமல் காடுகளில் திரியும். முதல் வகை விலங்குகளே, வீட்டு விலங்குகள் என்றும் மற்றவைகளேக் காட்டு விலங்குகள் என்றும் சொல்லலாம்.

வீட்டு விலங்குகளுள் நாயே முதலாவது. அது மனிதர்களுடன் கூடிப் பழகுகிறது. நாய் மிக அறி வுள்ள ஜந்து. அது தன்னே வளர்ப்பவரிடம் நன்றி யுடையது. தான் வாழும் வீட்டிற்குள் அயலார் நுழைந்தால், அது குறைக்கும்.

நாயின் கண்கள் வட்டமானவை. இருளிலும் அந்தக் கண்களுக்குப் பார்வை உண்டு. சில நாய்களுக் குக் காதுகள் நீண்டு மடிந்து இருக்கும். சில நாய்களின் செவிகள் அதிக நீளமின்றி நிமிர்ந்து இருக்கும். நாய்க்கு மோப்பம் பிடிக்கும் சக்தி மிகுதி. போகும் வழி யெல்லாம் அது மோப்பம் பிடித்துக்கொண்டே போகும்.

நாயின் நாக்கு நீளமானது அதன் பற்கள் நீண்டு கூர்மையாக இருக்கும். நாயின் நீண்ட வால் எப்பொ

ழுதும் வளர்ந்து இருக்கும். நாய் வேகமாக ஓடும். தண்ணீரில் நீந்தும் சக்தி நாய்க்கு இயற்கையாகவே உண்டு. வேட்டைக்காரர்களுக்கு நாய் மிகவும் உபயோகமானது.

இது ஒரு கொச்சி நாய். இது தரையோடு தரையாய்ப் பதுங்கியிருக்கிறது. அது செடியின் கீழ் இருக்கும் குருவியைப் பாய்ந்து கௌவப் போகிறது. கௌவி அதை தன் எஜமானனிடம் கொண்டு போய்க் கொடுக்கும்.



இந்தப் படத்தைப் பாருங்கள். படகில் இருந்து ஒரு குழந்தை தண்ணீரில் தவறி விழுந்து விட்டது. அதை அந்த நாய் தன் வாயால் கௌவிக்கொண்டு



நீந்தி வருகின்றது. அந்தநாய் தைரியமாகத் தண்ணீரில் குதித்துக் குழந்தையின் சட்டையைக் கௌவி நீந்தி வாராவிட்டால் குழந்தை பிழைக்குமா?

பிள்ளைகளே, இந்தப் படத்தைப் பாருங்கள். இதில் இருக்கும் நாய்கள் இரண்டு ஆடு களைச் சிதற விடாமல் மடக்கிப் பட்டிக்குள் போகும்படி செய்கின்றன. எஜமானருக்குச் சிரமம் இல்லாமல் நாய்களே இந்த வேலையைச் செய்வது ஆச்சரியம் அல்லவா?



அடுத்த படத்தில் ஒரு புலியை இரண்டு நாய்கள் மடக்குவதைக் காணலாம். தூரத்தில் ஒருவன் குதிரை மேல் துப்பாக்கியோடு இருக்கிறான். இந்த நாய்கள்



வீரம் உடையவை. இரண்டும் சேர்ந்து ஒரு புலியைக் கொன்றுவிடும். ஒன்று புலியின் பின்புறம் தாக்கும். புலி பின்புறம் திரும்பி அந்த நாயை எதிர்க்கும்.

போது முன்புறமுள்ள நாய் பாய்ந்து புலியின் கழுத்தையோ காதையோ கௌவும். புலி இந்த நாயின் பக்கம் திரும்பினால், அந்த நாய் பின்னிருந்தே தொடையைப் பிடித்துக் கடிக்கும். இவ்வாறே மாறி மாறித் தாக்கி, ஒரு புலியை இரண்டு நாய்களும் சேர்ந்து கொன்றுவிடும்.

### சொற்பொருள்

ஜந்து - விலங்கு, விசுவாசம் – நம்பிக்கை, அயலார் - புது மனிதர்கள், எஜமானன்-சொந்தக்காரன், மோப்பம் - வாசனை காண - பார்க்க.

### கேள்விகள்

1. விலங்குகளில் எத்தனை விதம் உண்டு ?
2. விலங்கின் வேறு பெயர் என்ன ?
3. நாய் வீட்டு விலங்கா ? காட்டு விலங்கா ?
4. நாயின் குணங்களைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.
5. நாயால் இருட்டில் பார்க்க முடியுமா ?
6. செவி என்பது எது ?
7. நாய்க்கு எந்தச் சக்தி அதிகம் ?
8. நாயின் வாலைப்பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது ?
9. தண்ணீரில் போட்டுவிட்டால் நாய் என்ன செய்யும் ?
10. இரண்டு நாய்கள் சேர்ந்து ஒரு புலியைக் கொல்லுவது எப்படி ?

### பயிற்சி

**கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை எழுது :—**

1. இரண்டு நாய்கள் சேர்ந்து ஒரு புலியை ———
   (கடிக்கும், கொல்லும், மடக்கும்.)

2. முன்புறமுள்ள நாய் பாய்ந்து புலியின் கழுத்தை———
(கடிக்கும், பிடிக்கும், கௌவும்.)

3. அந்தக் குருவியைப் பிடிக்க இந்த நாய்——— இருக்கிறது.
(மறைந்து, ஒளிந்து, பதுங்கி.)

4. தண்ணீரில் நீந்தும் சக்தி நாய்களுக்கு ——— உண்டு.
(எப்பொழுதும், வழக்கமாக, இயற்கையாக.)

5. தைரியமான, வீரத்துடன், சக்தி, வளைந்து, உபயோகமாக, விசுவாசமாக—இந்தச் சொற்களில் பொருத்தமான ஒவ்வொன்றைக் கீழ்வரும் ஒவ்வொரு வாக்கியத்தில் பொருத்து :—

1. எஜமானனிடம் நாய் ——— இருக்கும்.
2. நாய் ——— செய்கை செய்யும்.
3. வேட்டைக்கு நாய் ——— இருக்கும்.
4. மோப்பம் பிடிக்கும் ——— நாயிடம் உண்டு.
5. புலியோடு நாய் ——— சண்டை செய்யும்.
6. நாயின் வால் ——— இருக்கும்.

---



# 20. பாம்பாட்டிப் பாட்டு

| | | |
|---|---|---|
| நாகதாளி | நாகப் பாம்பு | நஞ்சு |
| எறும்புப் புற்று | பாகமான | எளிய |
| நச்சுப் பாம்பு | மயங்கிடுதல் | ஏழை |
| நல்ல பாம்பு | கோழை | இசை |
| உயர்ந்து நின்று | தோல் | சீறி |
| சுறுசுறுப்பாய் | உரியும் | படம் |

நாகதாளி நடுவிலிருக்கும் நாகப்பாம்பே !
நஞ்சுமிக வைத்திருக்கும் நல்லபாம்பே !
பாகமான நாக்கிருக்கும் நச்சுப்பாம்பே !
பயமின்றி என்னெதிரில் ஆடாய் பாம்பே ? 1

எறும்புப்புற்றி லேறிவாழும் ஏழைப்பாம்பே!
ஏனோ நீ மயங்கிடுதல் எளியபாம்பே!
சுறுசுறுப்பாய் வெளிப்பட்டு வாராய்பாம்பே!
சுற்றியே நீ தலையசைத்து ஆடாய்பாம்பே! 2
கீரிகண்டால் பயந்து நிற்கும் கோழைப்பாம்பே!
இசைவிரும்பிப் படம் விரித்து நிற்கும்பாம்பே
உரியுந்தோல் உனக்கேனோ சொல்லாய் பாம்பே!!
ஊக்கமாய் உயர்ந்து நின்று ஆடாய் பாம்பே 3

கேள்விகள்

1. பாம்பின் நாக்கு எப்படி யிருக்கும்?
2. பாம்பு எங்கே வசிக்கும்?
3. பாம்பு எதற்கு பயப்படும்?
4. பாம்பு எதை விரும்பும்?
5. பாம்பு எப்போது படம் விரித்து ஆடும்?

பயிற்சி

ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தில் வைத்து எழுது:—

நாகதாளியில், விருப்பம், நீஞ்சு, படம் உரியும்.

———

# 21. நல்ல சிறுவன்

(படம் பார்த்துக் கதை எழுதுதல்)



# 22. பெரிய மனிதர்

(படம் பார்த்துக் கதை எழுதுதல்)



# 23. எதனால் செய்யப்பட்டது ?

| | | | |
|---|---|---|---|
| செருப்பு | நாற்காலி | சொக்காய் | புஸ்தகம் |
| கத்தி | புட்டி | விசிறி | உரல் |

மரத்தால் பனைமட்டையால், எஃகால், கல்லால், தோலால், பருத்தியால், காகிதத்தால், கண்ணாடியால்

மேலே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை ஏற்றபடி பின்வரும் வாக்கியங்களில் சேர்த்து எழுது :—

1. செருப்பு ———— செய்யப்பட்டது.
2. புட்டி ———— செய்யப்பட்டது.
3. நாற்காலி ———— செய்யப்பட்டது.
4. சொக்காய் ———— செய்யப்பட்டது.
5. விசிறி ———— செய்யப்பட்டது.
6. புஸ்தகம் ———— செய்யப்பட்டது.
7. உரல் ———— செய்யப்பட்டது.
8. கத்தி ———— செய்யப்பட்டது.

# 24. வேலன் கதை

| | | |
|---|---|---|
| ஊக்கம் | வழக்கம் | தீங்கு |
| வெளியூர் | மனம் | எண்ணம் |
| சாய்ந்து | கிள்ளு | நோக்கி |
| ஓசை | அலறி | குரல் |
| கழிந்தன | தனியாக | வேகமாக |

ஓர் ஊரில் ஒரு சிறுவன் இருந்தான்.
அவனுக்கு வேலன் என்று பெயர்.
அவனுடைய தந்தையார் பெயர் மலையப்பர்.
வேலன் படிப்பதில் ஊக்கம் உடையவன்.
அவனிடம் பொய் பேசும் வழக்கம் இல்லை.
அவன் யாருக்கும் ஒரு தீங்கு செய்யமாட்டான்.
ஆனால், அவனிடம் ஒரு கெட்ட குணம் இருந்தது.
அவன் தந்தைக்கு அடங்கி நடப்பதில்லை.
வேலனுடைய வீட்டுக்கு அப்பால் ஒரு காடு உண்டு.
அந்தக் காட்டில் ஒரு கோனாய் இருந்தது.



இரவில் அந்தக் காட்டிற்குள் யாரும் தனியாகப் போவதில்லை.

மலையப்பர் ஒருநாள் வேலனை அருகில் அழைத்தார்; "இருட்டில் காட்டுக்குள் போகாதே," என்றார்.

அவர் சொல்லி பல நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் மலையப்பர் வெளியூருக்குப் போனார்.

அன்று மாலை வேலன் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றிற்று.

காட்டுக்குள் போய் வர அவன் ஆசைப்பட்டான்.

உடனே அவன் வேகமாகக் காட்டுக்குள் ஓடினான்.

இருட்டு வருவதற்குள் அவன் திரும்பிவிட எண்ணினான்.



காட்டில் நல்ல களாக் காய்கள் காய்த்து இருந் தன.

அவற்றை வேலன் பறித் துத் தின்றான்.

இதற்குள் இருள் சூழ்ந்து விட்டது.

வேலன் வீடு நோக்கி நடந்தான்.

ஆனால், இருட்டில் வழி தெரியவில்லை.

அவன் மிகவும் பயந்துவிட்டான்.

'தந்தையின் சொல்லை மீறினேனே!' என அவன் வருந் [தினான்.

திடீரென்று அவனுக்கு எதிரில் கோனாய் வந்தது.

அதன் நெருப்புப்போன்ற கண்களை வேலன் பார்த்தான்.

வேலன் மிகவும் பயந்து அலறி விழுந்தான்.

அப்போது மலையப்பர் ஊரை நோக்கி வந்துகொண் டிருந்தார்.

வேலன் அலறின குரல் அவர் காதில் விழுந்தது.

அவர் ஓடோடியும் வந்தார்.

அவர் ஓடி வரும் ஓசை கோனுய்க்குக் கேட்டது.

அது பயந்து ஓட்டம் பிடித்தது.



மலையப்பர் கீழே கிடந்த வேலனைக் கண்டார்.

அவனைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் போனுர்.

மலையப்பர் வராவிட்டால் வேலன் கதி என்ன?

பிள்ளைகளே, நீங்கள் என்றும் தந்தை சொல்லுக்கு அடங்கி நடக்கவேண்டும்.

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

கேள்விகள்

1. வேலன் எதன்பேல் ஊக்கம் உடையவன்?
2. வேலனிடம் எந்த வழக்கம் இல்லை?
3. வேலனிடம் இருந்த ஒரே கெட்ட குணம் யாது?
4. காட்டுக்குள் இரவில் ஏன் தனியாகப் போகக்கூடாது?
5. வேலன் ஏன் இருட்டும் வரை காட்டில் இருந்தான்?
6. இருட்டில் வேலன் என்ன நினைத்து வருந்தினுன்?

7. இருட்டில் வேலன் என்ன கண்டான்?

8. மலையப்பர் காதில் எந்தக் குரல் கேட்டது?

9. கேட்டதும் அவர் என்ன செய்தார்?

10. மலையப்பர் வராவிட்டால் வேலன் கதி என்ன?

பயிற்சி

**கோடிட்ட இடங்களை நிரப்பு :—**

1. மலையப்பர் வேலனை அழைத்து ——— ——— ——— என்றார்.

2. வேலன் அலறின குரல்கேட்டு மலையப்பர் ——— வந்தார்.

3. காட்டில் நல்ல களாக்காய்கள் ——— ———

4. மலையப்பர் ஓடி வரும் ஓசை கேட்டுக் கோனாய் ——— ——— ஓடி விட்டது.

5. இருட்டு வருவதற்குள் ——— வேலன். ——— ———

---

## 25. உலகநீதி

| | | |
|---|---|---|
| பொல்லாங்கு | வஞ்சனை | இணங்க |
| நெஞ்சு | அடுத்தவர் | வேண்டா |
| தருமம் | குற்றம் | வார்த்தை |
| மூத்தோர் | தெய்வம் | பாராட்டி |
| பழிக்க | புதைக்க | தனம் |

1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டா.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டா.
3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டா.
4. வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டா.
5. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டா.
6. நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டா.
7. அஞ்சாமல் தனிவழியே போக வேண்டா.
8. அடுத்தவரை ஒருநாளும் மறக்க வேண்டா.
9. தனந்தேடி உண்ணுமல் புதைக்க வேண்டா.
10. தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டா.
11. குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டா.
12. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டா.
13. கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டா.
14. கோயிலில்லா ஊரில்குடி இருக்க வேண்டா.
15. மூத்தோர்சொல்வார்த்தைதனை மறக்க வேண்டா.
16. தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டா.

## 26. தவளையும் எலியும்

| | | | |
|---|---|---|---|
| வயல் | வளை | உடன்பட்டது | கரை |
| ஞாபகம் | இறந்து | தின்றுவிட்டது | நட்பு |

(மனத்திற்குள் படித்துக்கொண்டு பிறகு கதையைச் சொல்ல வேண்டும்)

ஓர் ஊரில் ஒரு குளம் இருந்தது. அந்தக் குளத்தில் ஒரு தவளை வசித்து வந்தது. குளத்துக்கு அருகில் ஒரு வயல் இருந்தது. அந்த வயலில் ஓர் எலி வளை இருந்தது. அந்த வளையில் ஒரு சுண்டெலி வசித்து வந்தது. ஒரு நாள் தவளை குளக்கரையின் மேல் வந்து உட்கார்ந்துகொண்டிருந்தது. அப்போது எலி அங்கே வந்தது. எலிக்கும் தவளைக்கும் நட்பு ஏற்பட்டது. இரண்டும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருந்தன. அப்போது எலி தவளையைப் பார்த்து, " நண்பா, நாம் இருவரும் இனிமேல் பிரியக்கூடாது. என் வாலையும் உன் காலையும் சேர்த்துக் கட்டிக்கொண்டால், நாம் பிரியாமல் இருக்கலாம்" என்று சொல்லிற்று. அதற்குத் தவளையும் உடன்பட்டது. உடனே அவை வாலையும் காலையும் சேர்த்துக் கட்டிக்கொண்டன.

திடீரென்று தவளைக்குக் குளத்தின் ஞாபகம் வரவே, அது குளத்திற்குள் குதித்துவிட்டது. ஆனால், கூட இருந்த எலியோ, தண்ணீரில் இருக்க முடியாமல், இறந்து மிதந்தது. இதை ஆகாயத்தில் பறந்து கொண்

டிருந்த ஒரு பருந்து பார்த்துப் பாய்ந்து எலியைக் கௌவிக்கொண்டு போயிற்று. எலியோடு தவளையும் அகப்பட்டுக் கொண்டது. பருந்து இரண்டையும் தின்றுவிட்டது.

பிள்ளைகளே இந்தக் கதையினால் நீங்கள் அறிந்து கொள்ளும் நீதி யாது? எவரும் தம் இனமறிந்தே சேரவேண்டும்; இனம் மாறி நட்பு செய்தால் துன்பம் விளையும் என்பது விளங்குகிறதல்லவா?

"இணக்கம் அறிந்து இணங்கு"

(ஆத்திசூடி)

கேள்விகள்.

1. தவளை எங்கே வசித்தது?
2. எலி எதில் வசித்திருந்தது?
3. தவளைக்கும் எலிக்கும் எப்படி ஏற்பட்டது?
4. பிரியாதிருப்பதன் பொருட்டு எலி கூறிய யுக்தி யாது?
5. இறந்து மிதந்தது எது? ஏன்?
6. பருந்து எதைக் கொண்டு போயிற்று?
7. தவளை ஏன் பருந்துக்கு இரையாயிற்று?

பயிற்சி

1. இந்தக் கதையைச் சுருக்கிச் சிலவரிகளால் எழுது.
2. கோடிட்ட சொற்களை மாற்றி அதே பொருளில் வேறு சொல் அமைக்க.

வசித்து வந்தது, நட்பு ஏற்பட்டது. பார்த்துக் கூறிற்று. என்று சொல்லிற்று, கட்டிக் கொண்டன, இறந்து மிதந்தது. பருந்து தின்றது.



## 27. சேவலும் சிற்றெறும்பும்

| | | |
|---|---|---|
| சிற்றூர் | கிளம்பி | உலாவி |
| கொத்தி | விழித்து | ஆச்சரியம் |
| மகிழ்வாய் | கம்பீரமாக | சீத்து |
| | அற்புதம் | |

ஒரு சிற்றூரில் ஒரு சேவல் இருந்தது. ஒரு நாள் அதிகாலையில் அது விழித்து எழுந்து வழக்கம் போலக் 'கொக்கரக்கோ' என்று கூவிற்று. பிறகு, கொஞ்சம் உலாவி வரலாம் என்று எண்ணித் தன் இடத்தை விட்டு வெளியே கிளம்பிச் சென்றது. பழக்கப்படி தரையில் இருக்கும் தானியங்களை அது கொத்தித் தின்றுகொண்டும் பூமியைச் சீத்துக்

கொண்டும் கம்பீரமாய் நடந்து போயிற்று. அப்போது அதன் எதிரில் ஒரு சிற்றெறும்பு பரபரப்புடன் வாயில் ஒரு தானியத்துடன் வந்துகொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் சேவலுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று; தினந்தோறும் நான் தானே காலையில் எல்லோருக்கும் முன்னே எழுந்திருப்பவன்! இன்று இந்தச் சிற்றெறும்பு எனக்கு முன்னே எழுந்து சுறுசுறுப்பாய் இறை தேடுகிறதே! இது என்ன ஆச்சரியம்!" என்று அது எண்ணிற்று. சேவலின் மனத்தில் இவ்விதமான எண்ணம் ஏற்பட்டபோது எறும்பின் மனத்திலும் ஓர் எண்ணம் உண்டாயிற்று. காலையில் எழுந்து சுறுசுறுப்புடன் வேலை செய்வதில் நான் ஒருவன்தானே பேர் எடுத்தவன்? இன்று எனக்கு முன்னே எழுந்து வந்து இந்தச் சேவல் பரபரப்புடன் தரையைச் சீத்து இரை தேடுகிறதே! இது என்ன புதுமை! என்று அது நினைத்தது.

இனிமேல் நான் இன்னும் அதிகமான சுறுசுறுப்போடு இருக்கவேண்டும்! என்று சேவல் தீர்மானம் செய்துகொண்டு, உற்சாகத்தோடு பாடிக்கொண்டே போயிற்று. எறும்பும், இனிமேல் நானும் மிகுந்த பரபரப்பாய் இருக்கவேண்டும்" என்று உறுதி செய்துகொண்டு, மகிழ்வாகப் பாடிக்கொண்டே போயிற்று. சேவல் பாடுவதை எறும்பு கேட்பதும் எறும்பு பாடுவதைச் சேவல் கேட்பது

மாக அவை போயின. அந்தப் பாட்டை நீங்கள் படித்துப் பாருங்கள் :—

### சேவல்

கொக்கரக்கோ கொக்கரக்கோ கொக்கரக்கோ
எழுந்திருங்கள் எழுந்திருங்கள் சிறுவர்களே !
பழந்தின்னும் எறும்புபோல எழுந்திருமே !

### எறும்பு

தலையைத்தூக்கிக் கொக்கரிக்கும் சேவல்போலக்
காலைவேளை எழுந்திருங்கள் சிறுபாலர்களே !

### சேவல்

கொக்கரக்கோ கொக்கரக்கோ கொக்கரக்கோ
அவரையுள்ளும் துவரையுள்ளும் துளைத்துச்
செல்லும்
கவலைகொண்ட எறும்பைப்போல நீரெழுந்து
வாருமே !

### எறும்பு

சீத்துச்சீத்துத் தரையைக்கீறிக் கொக்கரித்தேகும்
வாத்தைவெல்லும் சேவல்போல நீரெழுந்து
வாருமே

### கேள்விகள்

1. எறும்பைக் கண்டு சேவல் என்ன நினைத்தது ?
2. சேவலைப் பார்த்து எரும்பு என்ன எண்ணிற்று ?

### பயிற்சி

புதுமை, இரை, சீத்து, கம்பீரமாக—இவற்றில் ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வாக்கியத்தில் வைத்து எழுது.

## 28. எதிர் பதகங்கள்

1. பலராமன் பெரிய பையன்.
சிவராமன் சிறிய பையன்.

2. மேஜையின் மேல் புத்தகம் இருக்கிறது.
கட்டிலின் கீழ் முக்காலி இருக்கிறது.

3. இராமன் நெட்டையான பிள்ளை.
கிருஷ்ணன் குட்டையான பிள்ளை.

4. இது அதிக சூடாய் இருக்கிறது.
இது அதிக குளிர்ச்சியாய் இருக்கிறது.

5. அவன் வேகமாய் ஓடுவான்.
இவன் மெதுவாய் நடப்பான்.

6. நடேசன் உரக்கப் பாடுவான்.
கணேசன் மெல்லப் பாடுவான்.

7. அவனிடத்தில் நல்ல குணம் உண்டு.
இவனிடத்தில் கெட்ட குணம் இல்லை.

8. கமலம் சிரித்துக் கொண்டே வந்தாள்.
மரகதம் அழுதுகொண்டே சென்றாள்.

9. அவர்கள் மகிழ்வுடன் பேசினர்.
இவர்கள் வருத்தத்துடன் பேசினர்.

10. தம்பி சுறுசுறுப்பு உள்ளவன்.
வரதன் சோம்பல் இல்லாதவன்.




# 29. இரயில்வே ஸ்டேஷன்

| | | |
|---|---|---|
| இரயில் | பெட்டிகள் | எந்திரம் |
| ஸ்டேஷன் | பிரயாணி | எஞ்சின் |
| நீராவி | சில்லறை | குற்றம் |

படத்தில் தெரிவது ஓர் இரயில்வே ஸ்டேஷன். இரயில் வண்டி ஸ்டேஷனில் நிற்பதைப் பாருங்கள். இரயில் வண்டியில் பல பெட்டிகள் இருக்கின்றன. அவைகளில் பிரயாணிகள் சிலர் ஏறுகிறார்கள்; சிலர் இறங்கிச் செல்லுகிறார்கள்.

இரயில் வண்டியின் முன்பக்கம் இருப்பது எஞ்சின்: அதாவது ரயில் வண்டிகளை இழுத்துச் செல்லும் எந்திரம். இது நீராவியின் சக்தியால் ஓடுகிறது. இது முழுவதும் இரும்பினால் செய்யப்பட்டது. எஞ்சினை ஓட்டுபவர் அதன் படியின் அருகே நிற்கிறார்.

இரயில் வண்டித் தொடர் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் சில நிமிஷ நேரம் நிற்கும். பிரயாணிகள் ஏறி இறங்கியானதும் புறப்பட்டுவிடும்.

137677

வண்டி ஸ்டேஷனில் நிற்கும்போது சில்லறை வியாபாரிகள் இரயில் அடியில் சோடா, காபி, பழம், முதலியவைகளைக் கூவி விற்பார்கள்.

ரயில் வண்டியில் பிரயாணம் செய்வதற்குப் பணம் கொடுத்து டிக்கட்டு வாங்கவேண்டும். அந்த டிக்கட்டை இறங்கும் ஸ்டேஷனில் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். டிக்கட் வாங்காமல் பிரயாணம் செய்வது குற்றம் ஆகும்.

நீ எப்பொழுதாவது ரயிலில் பிரயாணம் செய்திருக்கிருயா? அதைப்பற்றி விவரமாகக் கூறு.

கேள்விகள்

1. இரயில்வே ஸ்டேஷனில் நீ என்னென்ன பார்க்கிருய்?
2. இரயில் எஞ்சின் எங்கே இருக்கிறது? எந்தச் சக்தியால் அது ஓடுகிறது?
3. இரயில் அடியில் வியாபாரிகள் என்ன விற்கிருர்கள்?
4. இரயிலில் பிரயாணம் செய்பவர் என்ன செய்ய வேண்டும்?

பயிற்சி

'ஏறி' என்பதற்கு எதிர்பதம் 'இறங்கி' என்பது.

இதுபோல் எதிர்ப்பதம் எழுது:—

சில்லறை, வெளியே, சில.

---



# 30. கும்மிப் பாட்டு

குறவர் குடிசை நுழைந்தாண்டி—அந்தக்
கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி.
துறவர் வணங்கும் புகழாண்டி—அவன்
தோற்றத்தைப் பாடி யடியுங்கடி.
மாமயி லேறி வருவாண்டி—அன்பர்
வாழ்த்த வரங்கள் தருவாண்டி.
தீமை யிலாத புகழாண்டி—அவன்
கீர்த்தியைப் பாடி யடியுங்கடி.
பன்னிரு தோள்கள் உடையாண்டி—கொடும்
பாவிகள் தம்மை அடையாண்டி.
என்னிரு கண்கள் அணையாண்டி—அவன்
ஏற்றத்தைப் பாடி யடியுங்கடி.
வேங்கை மரமாகி நின்றாண்டி—வந்த
வேடர் தமையெல்லாம் வென்றாண்டி.
தீங்குசெய் சூரனை கொன்றாண்டி—அந்தத்
தீரனைப் பாடி யடியுங்கடி.

# 31. பழமொழிகள்

அகதிக்குத் தெய்வமே துணை.

ஆசை வெட்கம் அறியாது.

இடுவது பிச்சை; பெறுவது மோக்ஷம்.

காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.

கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா ?

எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

பசி ருசி அறியாது.

நற்குணமே நல்ல செல்வம்.

அதிக ஆசை அதிக நஷ்டம்.

ஆடை இல்லாதவன் அரை மனிதன்.

உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

காணிச் சோம்பல் கோணி அழிவு.

சின்னப் பாம்பானாலும் பெரிய தடியால் அடி.

கெட்டிக்காரன் பொய் எட்டு நாளில் தெரியும்.

# 32. விறகு வெட்டியும் தேவதையும்

## (நாடகம்)

ஒரு விறகு வெட்டி ஆற்றின் கரையில் இருந்த மரத்தை வெட்டும்போது, அவனுடைய கோடரி தவறித் தண்ணீரில் விழுந்துவிட்டது. அப்போது அந்த ஆற்றின் தேவதை, அவனுடைய குணத்தைச் சோதனை செய்யக் கருதி, ஒரு கிழவனைப் போலத் தண்ணீரிலிருந்து ஒரு பொன் கோடரியை எடுத்துக் கொண்டு வந்தது.

**தேவதை ?** அப்பா, விறகு வெட்டி, இதோ ; உன் கோடரியை எடுத்துக்கொள்.

**வி. வெட்டி :** ஐயா, இது என் கோடரி அல்லவே! இது பளபள வென்று இருக்கிறதே! என் கோடரி இப்படி இராதே.

**தேவதை :** ஓ! அப்படியா ? சரி. நீ இங்கேயே இரு. நான் போய் உன் கோடரியை எடுத்து வருகிறேன்.

என்று தேவதை தண்ணீரில் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடரியைக் கொண்டு வந்தது.

**தேவதை :** அப்பா, இதோ உன் சொந்தக் கோடரியைக் கொண்டுவந்துவிட்டேன். வாங்கிக்கொள்.

வி. வெட்டி: ஐயையோ! சாமி, இது எனக்கு வேண்டா. இது வெள்ளை வெளேர் என்று இருக்கிறதே! இது என்னுடையது அல்ல. என்னுடையது இப்படி இராதே!

தேவதை: சரி, சரி. உன் கோடரி எப்படித்தான் இருக்கும்? சொல் பார்ப்போம். சொன்னால் கொண்டு வந்து தருகிறேன்.

வி. வெட்டி: சாமி, அது மரப்பிடி போட்ட இரும்புக் கோடரி; அதிலும் மிகவும் பழையது.

தேவதை: இதோ கொண்டு வருகிறேன்

என்று நீருள் மூழ்கிக் கொண்டு வந்தது.

தேவதை: அப்பா, விறகு வெட்டி, இது அல்லவா உன் கோடரி?

வி. வெட்டி: சாமி, இதுதான் என்னுடையது. என்னை ஏன் பொய் சொல்லச் சொல்லுகிறீர்கள்?

தேவதை: நீ மிகவும் உண்மையானவன். மெய்பேசிய தால், இந்தப் பொன் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் உனக்கே கொடுத்துவிட்டேன். எடுத்துக்கொள்.

(என்று கூறித் தேவதை மறைந்துவிட்டது.)

# 33. முருகன் கதை

| | | |
|---|---|---|
| கன்னி | வருந்தினுள் | மகன் |
| கீழ்ப்படிந்து | நற்குணம் | கைகூடவில்லை |
| ஐயம் | ஏற்பட்டது | விரைவாக |

கன்னி என்ற ஒரு தாய் இருந்தாள்.
அவளுக்கு ஒரு மகன் இருந்தான்.



அவனுடைய பெயர் முருகன்.
முருகன் மிகவும் கெட்டவன்.
அவன் தாய்க்குக் கீழ்ப்படிந்து நடப்பதில்லை.
அதனுல், அவனை அவன் தாய் தண்டிப்பாள். தண்டித்தும் அவனுக்கு நற்குணம் ஏற்படவில்லை. முருகனுக்கு ஒரு மாமன் இருந்தார். அவர் பெயர் கறுப்பன்.



அவர் முருகன் வீட்டுக்கு ஒரு நாள் வந்தார்.
வந்தவர் முருகனுக்கு ஒரு மாம்பழம் தந்தார்.
அதைத் தின்ன முருகன் விரும்பினுன். ஆனுல், அவன் விருப்பம் கைகூடவில்லை. ஏனென்ருல், அன்று

அவனுக்கு வயிறு நொந்தது. ஆகையால், பழத்தை தாயார் வாங்கிக் கொண்டாள். பிடுங்கின பழத்தை





அவள் மறைவாக வைத்தாள்.



முருகன் யாருக்கும் தெரியாமல் அதை எடுத்துத் தின்றான்.

தின்னவே, அவனுக்கு வயிற்று நோய் மிகுந்து விட்டது.

இதைப் பார்த்த கன்னிக்கு மிக ஐயம் ஏற்பட்டது.



அவள் பழத்தைத் தேடிப் பார்த்தாள்.

பழமோ, வைத்த இடத்தில் இல்லை.

உடனே அவள் நடந்ததைத் தெரிந்துகொண்டாள்.

விரைவாக முருகனுக்கு மருந்து கொடுத்தாள்.



கொடுத்தும் அன்றிரவு முருகனுக்கு நோய் நீங்கவில்லை. பத்து நாட்கள் சென்ற பிறகே அவனுக்கு நோய் நீங்கியது. தாயின் சொல்லைக் கேளாததால் முருகன் வருந்தினுன். நீங்கள் தாயின் சொல்லைத் தட்டாமல் நடந்து நன்மை யடையுங்கள்.

## கேள்விகள்

1. கன்னியின் மகனுடைய பெயர் என்ன?
2. அவன் நல்லவனு, கெட்டவனு?
3. முருகன் கெட்டவன் என்பது எப்படித் தெரியும்?
4. முருகனுடைய மாமன் பெயர் என்ன?
5. முருகனுக்கு அவனுடைய மாமன் என்ன தந்தான்?
6. முருகனுக்கு வயிற்று நோய் ஏன் அதிகமாயிற்று?
7. முருகனுக்கு வயிற்று நோய் எப்பொழுது நீங்கிற்று?

## பயிற்சி

கோடிட்ட இடங்களை நிரப்பு:—

1. மகன், தாய் தந்தைக்கு ——— நடக்க வேண்டும்.
2. எவ்வளவோ தண்டித்தும் அவனுக்கு ——— உண்டாகவில்லை.
3. கொஞ்சமாக இருந்த வயிற்று நோய் அதிகமாகவே, கன்னிக்கு ——— ஏற்பட்டது.
4. முருகன் பத்து நாட்கள் வயிற்று நோயால் ———
5. கன்னி முருகனுக்கு ——— மருந்து கொடுத்தாள்.

# 34. தபால் கடிதம்

| | | |
|---|---|---|
| கடிதம் | தஞ்சாவூர் | முத்திரை |
| கார்டு | கவர் | சேவகர் |
| சீக்கிரம் | அடையாளம் | கட்டணம் |

**கண்ணன்:** அப்பா, தபாற்காறர் வந்து ஒரு கடிதம் கொடுத்து விட்டுச் சென்றார்.

**தந்தை:** கடிதத்தைக் கொண்டுவா, பார்க்கலாம்.

**கண்ணன்:** இதோ இருக்கிறது. இது யாரிடமிருந்து வந்திருக்கிறது. அப்பா !

**தந்தை:** இது தஞ்சாவூரிலிருந்து வந்திருக்கிறது.



ஆகையால், உன் மாமா எழுதிய கடிதமாக இருக்கலாம் ?

**கண்ணன்:** கவரை உடைத்துத் திறந்து பாராமலே, தஞ்சாவூரிலிருந்து வந்திருக்கிறது என்று எப்படி அறிந்தீர்கள் ?

**தந்தை:** கடிதத்தின் மேல் போடப்பட்டிருக்கும் முத்திரையில் 'தஞ்சாவூர்' என்று இருக்கிறது.

**கண்ணன்:** அப்பா, இதைத் தஞ்சாவூரில் எப்போது தபாலில் எழுதிப் போட்டிருப்பார்கள் ?

**தந்தை:** நேற்றுமாலை ஐந்தரை மணிக்கு முன் தபாலில் சேர்த்திருப்பார்கள். முத்திரையில் இக்கடிதம்

தபாலில் போடப்பட்ட மணியும் தேதியும் இருக்கின்றன.

**கண்ணன் :** சரி அப்பா. இந்தக் கவரில் இரண்டு முத்திரைகள் அடிக்கப்பட்டிருக்கின்றனவே! ஏன்?

**தந்தை :** ஆம், ஒவ்வொரு கடிதத்திலும் இரண்டு முத்திரைகள் இருக்கும். ஒன்று, கடிதம் எந்த ஊரில் போடப்பட்டதோ அந்த ஊரிலுள்ள தபாலாபீஸ் முத்திரை. மற்றொன்று எந்த ஊருக்கு அக்கடிதம் வந்து சேர்ந்ததோ அந்த ஊரிலுள்ள தபால் முத்திரை.

**கண்ணன் :** நேற்று மாலையில் தபாலில் சேர்க்கப்பட்ட கடிதம், இன்று காலையில் நமக்கு வந்து சேர்ந்து விட்டதே. இவ்வளவு சீக்கிரம் எப்படி வந்தது!

**தந்தை :** மாமா கடிதம் எழுதித் தபால் பெட்டியில் போட்டார். தபால் பெட்டியிலுள்ள கடிதங்களை எல்லாம் தபால் சேவகர் எடுத்து முத்திரை அடித்து வைத்தார். தபால் ஆபீஸ் குமாஸ்தா அவை போய்ச் சேர வேண்டிய ஊர் வாரியாகப் பிரித்துக் கட்டி, பையில் போட்டு, முடிச்சிட்டு அரக்கு முத்திரை வைத்து, தபால் சேவகரிடம் கொடுத்தார். அவர் அதை ரயிலடிக்கு எடுத்து வந்து ரயில் வரும் வரையில் காத்திருந்தார். ரயிலும் வந்தது. ரயிலில் தபால் கடிதங்களுக்கு ஒரு தனிப்பெட்டி உண்டு. அடையாளம் தெரிவதற்காக, அதற்கு வெளிப்பக்கம் நல்ல சிவப்பு வர்ணம் பூசப்பட்டிருக்கும்;

தபால் வண்டி என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும். அந்த வண்டியில் உள்ள உத்தியோகஸ்தரிடம் சேவகர் பையைக் கொடுத்தார். அவர் அதை நம் ஊர் ரயிலடியில் போய்க் காத்திருந்த தபால் சேவகரிடம் கொடுத்தார். அவர் தபாலாபீசுக்குக் கொண்டு போனர். அங்குள்ள உத்தியோகஸ்தர் முத்திரை யடித்து தபாற்காரரிடம் கொடுக்க, அவர் நம் வீட்டில் கொடுத்தார்.

**கண்ணன்:** சரி, நீங்கள் சொல்லியது எனக்கு விளங்கிற்று: கடிதத்தின் வலது பக்கம் மேல் மூலையில் சிறு படம் இருக்கிறதே, அது என்ன?

**தந்தை:** அதில் அரசருடைய முடியணிந்த தலையின் உருவம் அச்சிடப்பட்டிருக்கிறது. தபாலுக்கு நாம் செலுத்தவேண்டிய கட்டணத்தைச் செலுத்தி அதை வாங்கி ஒட்டவேண்டும். அல்லது, அது அச்சிடப்பட்ட கார்டேனும், கவரேனும் வாங்கிப் பயன்படுத்தவேண்டும்.

## கேள்விகள்

1. கடிதம் எவ்விதம் பிரயாணம் செய்கிறது?
2. தபால் முத்திரைகள் எங்கெங்கே இடப்படும்?
3. தபால் முத்திரைகளில் என்னென்ன காணப்படும்?
4. தபால் கடிதத்தில் தலைப்படம் எதைக் குறிக்கிறது?
5. கார்டின் விலை என்ன? கவர் விலை என்ன?

## பயிற்சி

1. உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதிக் காட்டு.
2. கடிதத்திலுள்ள முத்திரைகளைப்பற்றிக் கூறு.



## 35. எங்கள் நாடு (பாட்டு)

என்றனது திருநாடு கேட்கிறாயோ தம்பி
ஏற்றமுள்ள இந்திரனார் ஆளுமெங்கள் நாடு
சந்திரர்கள் சூரியர்கள் தவம்புரியும் நாடு
தவமுனிவர் ரிஷிகள் எல்லாம் வாழ்வது எங்கள் நாடு
கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு
குமரேசர் வாழுவதும் எங்களது நாடு
பச்சமலை பவழமலை எங்களது நாடு
பரமசிவன் வாழ்வதுவும் எங்கள்திரு நாடு
வங்காளம் சிங்காளம் மகதம் எங்கள் நாடு
வளம்பாடி குறியுரைக்க வந்தோமடா தம்பி

—அல்லி அரசாணி மாலை